REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: கார்த்திகை 29உ சனி (14—12—57) ★ ★ வெளியூர்: கார்த்திகை 30உ ஞாயிறு (15—12—57) [இதழ் 157

அந்தமானில் குடியமைப்பு

4,000 ஏக்கர் நிலம் திருத்தியமைக்கப்பட்டதாம்

புதுடில்லி, டிச. 14—

அந்தமான் தீவுகளில் குடியமைப்பதற்காக 578 இடம் பெயர்ந்தோர்கள் உள்பட 632 குடும்பங்களுக்கென்று, 1956-ம் ஆண்டிலும், 1957-ல் நவம்பர் இறுதிவரையிலும் 4,000 ஏக்கர்களுக்கு மேல் நிலங்கள் திருத்தப்பட்டுள்ளதாம்.

இந்தக் குடும்பங்கள் மேற்கு வங்கம், கேரளம், சென்னை ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவையாம்!

காமராசர் கரத்தை வலுப்படுத்திய பலனை இன்று காண்கிறோம்

ஓட்டுமுறையால் நாட்டை விடுவிப்பதே தி. மு. கழகத் திட்டம்

நாடு மீட்கும் திட்டத்துக்கு நல்ல வழி காட்டுங்கள்

பெரியாருக்கு அண்ணாவின் உருக்கமான வேண்டுகோள்

சென்னை இராயப்பேட்டை, முத்தமிழ் முன்னேற்ற மன்றத்தின் சார்பில், 10—12—57-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுகையில், 'திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் இணைவது சாத்தியமா' என்ற கேள்விக்கு விடையளிக்கும் வகையில், நிலைமைகளை மிக உருக்கமான முறையில் விளக்கினார்; அதன் விவரம் இங்கு தரப்படுகிறது:—

"நம்முடைய வலிமையைச் சிதைய விட்டுவிட்டோம் — சேமித்து வைக்கத் தவறிவிட்டோம் என்பதைத்தான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"நாடு விடுதலை பெறுவதற்கான இன எழுச்சி ஏற்பட வேண்டுமென்றால், நேருவின் ஆணவத்தைப் பணிய வைக்க வேண்டுமென்றால் அதற்கு இரண்டு முறைகள்தான் உண்டு; ஒன்று—ஓட்டு முறை; மற்றொன்று—வேட்டு முறை!

"ஆங்கிலத்தில் இந்த இரண்டையும் — Ballot, Bullet என்று சொல்லுவார்கள். இந்த இரண்டில், 'வேட்டு' முறை அநாகரிகமானது; தி. மு. கழகத்திற்கு உடன்பாடல்லாதது; தமிழ்ப் பண்பாட்டுக்கும் ஏற்றதல்ல; எனவே, மிச்சமிருக்கும் கருவி எது என்றால், 'ஓட்டு' முறைதான். அந்த முறையைத்தான் தி. மு. கழகம் பின்பற்றி வருகிறது. இதற்காகத்தான் பெரியார், நம்மை என்ன பாடு படுத்தினார்? யார் யாரோடெல்லாம் சேர்ந்துகொண்டு என்னென்ன பாடுபடுத்தியிருப்பார்! நான் இதைச் சொல்லுகிறபோது திராவிடர்கழக நண்பர்கள் வருந்தக்கூடாது.

"காமராசர் கரத்தை வலுப்படுத்தாதீர்; வலுப்படுத்தினால், பிறகு அந்தக் கரமே உங்கள் தலையில் கைவைக்கும்—என்று நான் அப்பொழுது சொன்னேன்.

"புராணத்திலே ஒரு கதை உண்டு; பத்மாசுரன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான்; சிவபெருமான் அவன் எதிரில் தோன்றி—அவன் தவத்துக்கு மெச்சி, 'என்ன வரம் வேண்டும்' என்று கேட்க, 'நான் யார் தலையில் கைவைத்தாலும் அவர்கள் எரிந்து சாம்பலாகிவிடும்படியான வரம் வேண்டும்' என்று கேட்க; 'சரி, கொடுத்தேன் போ' என்று சிவபெருமான் சொல்ல, உடனே, 'உங்கள் தலையிலேயே முதலில் கையை வைத்து, வரம் பலிக்கிறதா என்று பார்க்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே சிவனை நெருங்க, அதைக் கண்டு சிவன் பயந்து ஓட ஆரம்பித்தாராம்; தந்திர புத்திபடைத்த 'மகா விஷ்ணு' அதையறிந்து, சிவனைக் காப்பாற்ற 'மோகினி' அவதாரமெடுத்து ஓடோடி வந்தாராம்; மோகினியைக் கண்ட பத்மாசுரன் அவள்மீது மோகம் கொண்டு, அவளை நெருங்கி, 'நாட்டியமாடு' என்று கூற, 'நீயும் ஆடு—நானும் ஆடுகிறேன்' என்று மோகினி கூற, பிறகு இருவரும் சேர்ந்து நாட்டியமாடும்போது, மோகினி, மெள்ள பத்மாசுரன் கையைப் பிடித்து அவன் தலையிலேயே வைத்தாள்; அவன் எரிந்து சாம்பலானான்—என்று அந்தப்புராணக் கதை கூறுகிறது.

"காமராசர் உங்கள் தலையிலே கைவைக்கக் கருதிய அந்த நேரத்தில், நான்தானே மோகினி அவதாரம் எடுத்து நாட்டிய மாட வேண்டிவந்தது? சட்டசபையில் திறம்பட ஆடினேனே! இதை முன்கூட்டியே யூகித்துத்தான்—காமராசரை நன்றாகப் புரிந்துதான் — நான் சொன்னேன், 'அவர் கரத்தை வலுப்படுத்தாதீர்கள்' என்று! அவருக்குத் தன் கட்சிதான் பெரிதே தவிர வேறொன்றுமில்லை. தன் கட்சியை விட்டுவிட்டு யாரிடத்திலும் அவர் நேசத்தைக் கேட்க மாட்டார். அவரைப் போல வேறு யாரும், கிடைக்கும் துணைகளையெல்லாம் தேடுவாருமில்லை; அந்தத் துணையைக் கட்சிக்கே பயன்படுத்துவாருமில்லை. இந்த வகையிலே அவரைப் பாராட்டாமலிருக்க முடியாது.

"தயவுசெய்து அந்தக் கரத்தைப் பலப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பலப்படுத்தினால் அதன் தாக்குதலால் தி. மு. க. வாழ முடியாமல் போய்விடும் என்பதற்கல்ல—நான் இதைச் சொல்வது!

"அவரது கரத்தை வலுப்படுத்தியவர்கள் எல்லாரும் இன்று உள்ளே இருக்கிறார்கள்; அதே நேரத்தில் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? அவர்கள் கொள்கையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல், சட்ட சபையிலே அமர்ந்து தங்கள் காரியத்தைச் சாதித்து வருகிறார்கள்.

"காங்கிரஸ்காரர்களும், திராவிட கழகத்தவரும் 'ரங்கராட்டினம்' போல சுற்றிக்கொண்டிருக்கிறார்கள்; அரசியல் துறையும் ஒரு ரங்கராட்டினம் போன்றதுதான்!

"ரங்கராட்டினத்திலே அமர்ந்து சுற்றுபவர்கள் ஒருவரை ஒருவர் தொடமுடியாது; ராட்டினம் சுற்றும் வேகத்தில், தொடுவது போல, கண்ணுக்குத் தெரியுமே தவிர, தொடமுடியாது. அரசியலில் சம்பந்தப்பட்டவர்களும் ரங்கராட்டினத்திலே அமர்ந்து சுற்றுவது போலத்தான் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

"பெரியாரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் நீங்கள்; அதற்கான வழியைக் காட்டுங்கள்; நான் வழிகாட்டுபவனல்ல; ஆனால் காட்டுகின்ற வழியிலே சிந்தித்துப் பார்த்து பின்பற்றுபவன்.

"எதையும் கண்ணை மூடிக் கொண்டு பின்பற்றவேண்டும் என்று சிலர் சொல்லுவார்கள் கண்ணை மூடிப் பின்பற்றுபவர்களுமிருக்கிறார்கள். நான் அப்படியல்ல; கண்ணை மூடிக் கொண்டு சென்றால், போக வேண்டிய இடத்துக்குச் செல்லமுடியாது. 'கண்ணை மூடிக்கொண்டுதான் பின் செல்லவேண்டும்' என்றுகூறி, 'வா, என் பின்னால்' என்றழைத்தால் எப்படிப் போக முடியும்?

"பெரியாரிடத்திலே எனக்கு பக்தி இல்லாததால் இதைச் சொல்லுவதாக எண்ணவேண்டாம்; கண்ணைத் திறந்து பார்த்தால்தான், 'வேறுபக்கம் திரும்பி விட்டோமா, அதே பாதையில்தான் செல்லுகிறோமா' என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்.

"கண்ணைமூடிப் பின்பற்றுபவர்களுக்குத்தான் திராவிடர் கழகத்தில் இடம் என்று சொல்லலாம்; நான் திராவிடர் கழகத்தில் இருந்தபோது, அந்த உரிமை எனக்கு இருந்தது. அதை விட்டுவிட்டுதான் வந்தேன்.

"பெரியாரை 'தந்தை' என்று மரியாதையுடன் அழைத்தார்கள்; நான், 'அண்ணன்' என்றுதான் அன்போடு அழைக்கப்பட்டேன். பெரியாரை 'தலைவர்' என்றார்கள்; என்னைத் 'தளபதி' என்று அழைத்தார்கள். இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ்காரர்களும் மற்றவர்களும், பெரியாரை மடாதிபதி போன்றவர் என்றால், அண்ணாதுரை கட்டளைத் தம்பிரான் போன்றவன் என்றுதான் சொன்னார்கள்.

"அப்படியெல்லாமிருந்த நல்ல நிலைமையை விட்டுவிட்டுத்தான் வந்தேன்.

"திராவிடர் கழகத் தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நமக்கிருக்கின்ற நோக்கம் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தப்பட வேண்டும்; உதாரணத்துக்குச் சொல்லுகிறேன் — பள்ளியிலே படிக்கின்ற பிள்ளைகள், இன்னின்ன வேளையில் இன்னின்ன பாடம் படிக்க வேண்டும்; சரித்திரம் இன்ன நேரத்தில்—கணிதம் இன்ன நேரத்தில்—என்று, இப்படியாக எது எது, எந்த நேரத்தில் படிப்பது என்பதை வகுத்து வரையறை செய்யப்பட்டிருக்கும் பள்ளிகளிலே. Time Table என்று சொல்லப்படும் கால அட்டவணை தயார் செய்து வைத்திருப்பார்கள். அதேபோல, ஒரு இயக்கத்தின் வேலை முறைகளுக்கும் கால அட்டவணை இருக்க வேண்டும்;

"பள்ளியிலே ஆசிரியர் திடீரென, 'இப்பொழுது பூகோள பாடம் நடக்கப்போகிறது' என்று சொன்னால், மாணவர்கள் என்ன செய்வார்கள்? முன்கூட்டியே மாணவர்கள் கையிலே கொடுக்கப்பட்டிருக்கிற கால அட்டவணையில், பூகோளம் குறிப்பிடப்பட்டிருந்தால்தான் அவர்கள், அந்தப் புத்தகத்தை அன்றைய தினம் எடுத்துக்கொண்டு பூகோளம் படிக்கத் தயாராக வந்திருப்பார்கள்; 'அவ்வப்போது பார்த்துக் கொள்ளலாம்' என்றால், பாடம் ஒழுங்காக நடக்க முடியாது; அதைப் போல, முன்கூட்டி திட்டம் போட நேரமில்லையென்றால், நம் இயக்கம் வளராது.

(தொடரும்)

பெரியாருக்கு ஆறு மாத வெறுங்காவல் தண்டனை

செஷன்ஸ் நீதிமன்ற தீர்ப்பு

திருச்சி, டிச. 14—

பெரியாரவர்களுக்கு ஆறு மாத வெறுங்காவல் சிறைத் தண்டனையளிக்கப்பட்டிருக்கிறது.

பெரியாரவர்கள்மீது தொடரப்பட்டிருந்த வழக்கு, திருச்சி செஷன்ஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு இன்று தீர்ப்பளிக்கப் பட்டது.

இன்று காலை, 11-30 மணி சுமாருக்கு பெரியாரவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரானார். நீதிபதி இந்தத் தீர்ப்பினை வழங்கினார்கள்.

தீர்ப்பை அறிந்து கொள்ள நீதிமன்ற வாயிலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஆவலுடன் கூடியிருந்தனர்.

தீர்ப்பு வழங்கப்பட்டவுடன், பெரியாரவர்கள் மகிழ்ச்சியுடன் தண்டனையை ஏற்றுக்கொண்டார்.

கழகத் தோழர் படுகொலை

கட்டாரியால் குத்திக் கொன்றனர் கம்யூனிஸ்டுக் கட்சியினர்

தென்னாற்காடு மாவட்டம் புவனகிரியை அடுத்த பூதவராயன் பேட்டையில் வசிக்கும் கழகத் தோழரும், விவசாய முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்தவருமான தோழர் ஆறுமுகம் என்பவர், 11—12—57 இரவு எட்டு மணியளவில் அவர் வீட்டுப் பின்புறத்தில் பதுங்கியிருந்த சில குண்டர்களால் கோரமாகக் குத்திக்கொலை செய்யப்பட்டுவிட்டார்.

தொண்டையில் கட்டாரி பாய்ந்ததால், எத்தகைய உதவியும் வருவதற்கு முன்பாகவே குத்தப்பட்ட இடத்திலேயே இறந்துவிட்டார்.

கொலையான கொஞ்ச நேரத்திற்குள் அந்தக் கிராமமே அல்லோலகல்லோலப்பட்டது. போலீசார் வந்து தைரியமூட்டினர்.

கொலைச் செய்தி அறிந்த சிதம்பரம் வட்ட தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் ஏ. ஈ. இராமகிருஷ்ணன் அவர்கள், சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து நிலைமையைக் கண்காணித்தார்.

கொலை சம்பந்தமாக 2 நபரைப் போலீஸ் கைது செய்திருக்கிறது. கைது செய்யப்பட்ட இருவரும் கம்யூனிஸ்டுகள் எனச் சொல்லப்படுகிறது. சந்தேகத்துக்குள்ளாகியிருக்கும் மற்றவர் தலைமறைவாகிவிட்டனராம்.

இறந்துபோன தோழர் ஆறுமுகத்திற்கு 35 வயதாகிறது. அவருக்கு தாயும், மனைவியும், 4 குழந்தைகளும் உள்ளனர். சவத்தின்மேல் மனைவியும் குழந்தைகளும் புரண்டு அழுத காட்சி வந்திருந்த போலீஸ் அதிகாரிகள் கண்களிலும் நீர் தளும்பச் செய்துவிட்டது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 14—12—57 சனி

கைத்தறித் தொழில் பாதுகாக்கப்படுமா?

கைத்தறித் துணிக்கு ரூபாய் ஒன்றுக்கு ஒன்றரை அணு வீதம் விற்பனைக் கழிவு கொடுத்துவந்தது அரசாங்கம்; அதை, இத்திங்கள் முதல் தேதி முதற்கொண்டு ஒரு அணுவாகக் குறைத்துவிட்டது.

இன்னும் ஓராண்டுக் காலத்துக்குப்பிறகு, இப்படி விற்பனைக் கழிவு கொடுக்கும் முறையையே ஒழித்துவிடப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. இதுவும் ஓராண்டுக் காலத்துக்குப் பிறகு கண்டிப்பாகச் செயல்படுத்தப்படும் என்பதில் ஐயமில்லை.

இப்படி விற்பனைக் கழிவு தரும் முறை, நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் மொத்த கைத்தறித் துணிக்கும் அளிக்கப்பட்டுவரவில்லை. அரசாங்கக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் விற்கப்படும் கைத்தறித் துணிக்கு மட்டுமேதான் இவ் விற்பனைக் கழிவு தரப்பட்டு வருகிறது.

கொடுக்கப்பட்டுவரும் விற்பனைக் கழிவும், கைநெசவு பாதுகாப்பு என்ற பெயரால், ஆலைத் துணி உற்பத்திமீது வரி விதித்துத் திரட்டப்பட்ட மொத்த நிதியிலிருந்தே தரப்பட்டுவருவதாகும். அந்த வரி இன்னும் நடைமுறையில் இருந்துதான் வருகிறது. அப்படி இருந்தும், கைத்தறித் துணிக்கு அளிக்கப்பட்டுவந்த விற்பனைக் கழிவு குறைக்கப்படுவதற்கும், சில மாதங்கள் சென்று அறவே நிறுத்தப்பட இருப்பதற்கும் நியாயமான காரணம் எதுவும் இருக்க நியாயமில்லை.

ஐந்தாண்டுக்கு முன்னால், கைத்தறி நெசவுத் தொழில், இருப்பதா இறப்பதா என்ற நிலைக்கு வந்துவிட்டது. அப்பொழுது, இந்தத் தொழிலுக்கு உயிரூட்டுவதற்காக இவ்விற்பனைக் கழிவு முறை செயல்படுத்தப்பட்டது.

கைத்தறி நெசவுத் தொழிலுக்கு உயிரூட்டுவது என்றால் என்ன? கைத்தறி நெசவை மட்டுமே தங்களின் மூல வாழ்க்கை வழியாகக்கொண்டு வாழ்ந்துவருகின்ற இலட்சக்கணக்கான மக்களுக்கு உயிர் வாழ வழிசெய்வது என்பதாகும்.

கொடுக்கப்பட்டுவந்த விற்பனைக் கழிவுத் தொகையின் அளவைக் கூட்டுவதும் குறைப்பதும், அல்லது அறவே கைவிடுவதும், கைத்தறியை நம்பி வாழ்ந்து கொண்டுவரும் இலட்சக்கணக்கான மக்களின் அன்றாட வாழ்வைப் பாதிக்கின்ற முக்கியப் பிரச்சினையாகும். எனவே, விற்பனைக் கழிவுத் தொகையைக் குறைப்பதினால், குறிப்பிட்ட அளவிற்குக் கைத்தறித் துணியின் விற்பனையில் குறைவு காணுவது நிச்சயம். அதன் விளைவாக, ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலையின்றி சோம்பிக் கிடக்க வேண்டிய பயங்கரமான நிலை ஏற்படுவதும் நிச்சயத்திலும் நிச்சயமாகும்.

நெசவாளர்கள் வேலை இழப்பது என்றால் என்ன பொருள்? நெசவாளர்கள், தம்தம் குடும்பத்துடன் பட்டினி கிடந்து மரணத்தை எதிர்நோக்கி இருப்பது என்பதுதான் பொருளாகும்.

ஏற்கனவே பல்லாயிரக்கணக்கானவர் இந்தத் தமிழகத்தில் வேலையின்றி சோம்பிக்கிடக்கின்றனர். அரைகுறை வேலை மட்டுமே செய்துவருவோர் தொகையும் இங்கு மிகுதியாக இருந்துவருகிறது. இந்தச் சூழ்நிலையில், நெசவாளர்களில் பல்லாயிரக்கணக்கானவர் வேலையிழப்பது என்பது விரும்பக் கூடியதுமல்ல—வேதனை தரக் கூடியதுமாகும்.

வேலையற்றுக் கிடப்பவர்களையும், அரைகுறை வேலையில் ஈடுபட்டு இருப்பவர்களையும் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளுகின்ற மாதிரியில் தமிழகத்தில் குறிப்பிடத் தகுந்த கணிசமான தொழில்வளம் ஏற்படவே இல்லை. அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்திருந்தாலாவது, விற்பனைக் கழிவுத் தொகையின் அளவைக் குறைப்பதின் மூலம் வேலையிழக்கக் கூடிய நெசவாளர்களுக்கு, புதிய பணிகளைத் தருவது எளிதில் நிறைவேறக்கூடும்.

ஆலைத் துணி உற்பத்திமீது கலால் வரி போட்டு, அவ்வரி மூலம் திரட்டப்பட்ட தொகை முழுவதையும், கைத்தறி நெசவுத் தொழில் வளர்ச்சிக்காக இதுவரை செலவு செய்துவந்தும், கைத்தறித் தொழில் தனித்தியங்கக்கூடிய பலம் பெறவில்லை; எனவே, பொருளாதாரக் கண்ணோட்டத்தைக் கொண்டு பார்க்குமிடத்து, பாதுகாப்பு அளித்துக் கைத்தறித் தொழிலைப் பாதுகாப்பது என்பது முடியாது எனச் சிலர், தங்களுக்குத் தெரிந்த பொருளியல் அறிவைக் காட்டிக்கொள்ளுகிறார்கள். அவர்களே, கைத்தறிக்குப் பதிலாக விசைத்தறியைப் புகுத்த வேண்டும் என்று பரிகாரமும் கூறுகிறார்கள்.

அவர்களுடைய பொருளியல் அறிவு பாராட்டுதலுக்குரியதுதான். விசைத்தறி மூலம் உற்பத்தி செய்யப்படும் துணியின் தரம் கூடியிருப்பதுடன், உற்பத்தியும் கூடி இருக்கும். அதே நேரத்தில், விசைத்தறியில் ஈடுபடும் நெசவாளியின் வருமானமும் கூடுதலாகும் என்பதும் உண்மைதான். ஆனால், ஒவ்வொரு விசைத் தறிக்கும நான்கு நெசவாளர்கள் வீதம வேலை இழக்கும் அவலநிலை ஏற்படும என்ற நிபுணர்கள் கருத்தை, தங்களுடைய பொருளியல் அறிவால் மறைத்துவிட முடியாது. எனவே, விசைத்தறித் திணிப்பால் வேலையற்றுப போகிற நெசவாளர்கள் அனைவருக்கும் வேலை தேடித்தர, தங்களுடைய பொருளியல் அறிவைக் கொண்டு அவர்கள் யோசனை கூறினால், அது பயன்படக்கூடியதாக இருக்கும். நிற்க.

விற்பனைக் கழிவு கூடுதலாகத் தரப்பட்டுவருகின்ற நேரத்திலேயே, அரசாங்கக் கூட்டுறவு விற்பனை நிலையங்களில், மூன்று மாத உற்பத்தித் துணி தேங்கிக் கிடப்பதாக சென்னை தொழில் அமைச்சர் அழுதிருக்கின்றார். விற்பனைக் கழிவுத் தொகையைக் குறைப்பதின் மூலம், இத் தேக்கத்தின் அளவு பெருகக் கூடும் என்று அமைச்சர் எதிர்பார்ப்பதில் ஆச்சரியமில்லை.

துணியின் தரத்தைக் கூட்டுவதற்கும், உற்பத்தியின் அளவைப் பெருக்குவதற்கும், கைத்தறி நெசவாளியின் வருமானத்தை உயர்த்துவதற்கும், தங்களுக்குத் தெரிந்த பொருளாதாரக் கண்ணோட்டத்திலிருந்து கருத்தறிவிக்கும் குணவான்கள், கதர் என்ற உருப்படாத தொழிலைக் குறித்துக் கண்டித்து ஒரு சொல்லும் சொல்லுவதில்லை. அதற்கெனப் பெருந் தொகையைச் செலவு செய்துவரும் மத்திய — மாநில அரசாங்கங்களின் மதியீனத்தைச் சுட்டிக்காட்டி, அவர்கள் சாடுவதும் இல்லை.

பெரியஇடத்துப் பொல்லாப்பு நமக்கு எதற்கு என்று அப் பொருளாதார அறிஞர்கள் இது பற்றிப் பேசாது இருக்கின்றனரோ அல்லது கதர் தொழிலை நம்பி ஒரு இலட்சம் பேர் உயிர் வாழ்ந்துவருகின்றனரே என்ற இரக்க சிந்தனையினால் அவர்கள் வாய்திறந்து கண்டிக்காது இருக்கின்றனரோ, நாம் அறியோம்!

கைத்தறிக்குப் பதிலாக விசைத்தறியைத் திணிப்பதினால் நெசவாளர்கள் பலர் வேலையிழப்பது நிச்சயம். அதுபோன்றே, விற்பனைக் கழிவுத் தொகையைக் குறைத்தாலும் சரி, அறவே தொலைந்தாலும் சரி, கைத்தறித் துணி விற்பனை குறைவதும், அதன்பலனாக நெசவாளர்கள் பலர் வேலையிழப்பதும் நிச்சயமாகும்.

கைத்தறிக் காப்புக்கு ஒரே ஒரு பரிகாரம்தான் இருந்து வருகிறது. கைத்தறிகளில் சில ரகத் துணிகளை ஆலைகளில் உற்பத்தி செய்யக் கூடாது எனத் தடைவிதிக்க வேண்டும் என்று சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடனடியாகச் செயல்படுத்த இந்தியப் பேரரசு முன்வரவேண்டும். அதுதான், கைத்தறிததொழிலைப் பாதுகாக்கும் சிறந்த பரிகார முறையாகும்.

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை

திட்டத்தை சென்னை சர்க்கார் கைவிட்டு விட்டதாம்!

நிதி உதவி கிடைக்காததே காரணமாம்!

சென்னை, டிச. 12—

சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்குவது என்ற திட்டத்தை சென்னை சர்க்கார் கைவிட்டு விட்டார்களாம்!

காரணம் நிதி வசதி இல்லாததுதானும்!

இந்தத் தொழிற்சாலையை நிறுவ எவரேனும் தனியார் முன்வருவார்களானல் அதனை வரவேற்பார்களாம்!

மாநில தொழில் மந்திரி வெங்கட்ராமன் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தங்களின் முன்னைய முடிவை மாற்றிக் கொண்டது பற்றியும் அவர் விளக்கியிருக்கிறார்.

தாங்கள், சேலத்தில் 10 அல்லது 12 ஆயிரம் டன் பாக்சைட் தோண்டுவது என திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் நிபுணர்கள் 20 முதல் 25 ஆயிரம் டன் பாக்சைட் கொண்டு நடத்தப்பட்டாலன்றி தொழிற்சாலை இலாபகரமாக நடத்தப்பட முடியாதென அறிவித்துள்ளனர் என்றும், முதல் திட்டத்தின் அளவிற்கே தொழில் முதலீட்டு உதவி 'கார்ப்பரேஷன்' நிதி உதவி தரச் சம்மதித்திருந்தாயும், நிபுணர் கருத்துப்படி பெரிய அளவில் தொழிற்சாலை துவங்க அவர்கள் நிதி உதவி தர மறுத்துவிட்டதாயும், அதனாலேயே தனியார் எவருக்காவது அத்தொழிலைவிட்டு விட சர்க்கார் முடிவு செய்ததாகவும் அம் மந்திரி கூறியிருக்கிறார்.

மேட்டூரில் காகிதத் தொழிற்சாலை

அனுமதி தந்து ஒன்றரை ஆண்டாகியும் நிறுவப்படவில்லை

'தொழிலதிபர்களிடம் உற்சாகமில்லை' என்கிறார் மந்திரி

சென்னை, டிச. 12—

புதியவகைத் தொழில்கள் நிறுவுவதில் இந்த மாநிலத்தில் உள்ள தொழிலதிபர்களுக்குப் போதுமான அளவு உற்சாகம் இல்லை என்றே தனக்குத் தோன்றுவதாக தொழில் மந்திரி வெங்கட்ராமன் கூறியிருக்கிறார்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பாக, மேட்டூரில் ஒரு காகிதத் தொழிற்சாலை நிறுவுவதற்கு ஒரு நிறுவனத்திற்கு லைசென்சு வழங்கப்பட்டதாகவும், ஆனால் இப்போது அந்த நிறுவனம், தொழில் துவங்க தன்னால் முடியவில்லை என்று தெரிவித்துவிட்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

அதேபோல, சேலத்தில் தேனிரும்புத் தொழிற்சாலைகள் அமைக்க நான்கு லைசென்சுகள் வழங்கப்பட்டன என்றும், அவற்றில் ஒருவர் மட்டுமே தொழிற்சாலை துவங்க முன்வந்திருக்கிறார் என்றும் மந்திரி கூறியிருக்கிறார்.

கிராம ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு

ஐதராபாத், டிச. 13—

ஆந்திர மாநிலத்தில் கிராம ஊழியர்களின் அடிப்படை ஊதியம் சனவரி முதல் உயர்த்தப்படுகிறது.

கிராமக் கர்ணங்கள் ரூ. 28; முன்சீப்புகள் ரூ. 23; தலையாரிகள் ரூ. 20 என்ற அளவில் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த உயர்வின் காரணமாக ஆந்திர அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 15 இலட்சம் அதிகம் செலவாகும்.

கைத்தறித் துணி வாங்குவோருக்குக் கழிவுத் தொகை

'குறைக்கப்படக் கூடாது' என்ற சென்னையின் கோரிக்கை

ஏற்பதற்கு டெல்லி மறுத்து விட்டதாம்!

சென்னை, டிச. 12—

கைத்தறி ஆடை விற்பனைக்கு ரூபாய்க்கு ஒன்றரை அணு வீதம் தரப்பட்டுவந்த 'ரிபேட்' இனி ஒரு அணுவாகக் குறைக்கப்படும் என்ற முடிவை புனர்பரிசீலனை செய்யுமாறு டெல்லி எஜமானர்களுக்கு, தமிழ் நாட்டு சர்க்கார் மனுப் போட்டிருந்தார்களாம்!

'அதெல்லாம் முடியாது; குறைத்தது குறைத்ததுதான்' என்று டெல்லி தெரிவித்துவிட்டதாம்!

மந்திரி வெங்கட்ராமன் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

இந்த ஒரு அணு 'ரிபேட்'டாவது நீடிக்கும் என்று இப்போது நம்புகிறார்களாம் — ஆண்டவனைப் பிரார்த்திக்கிறார்களாம் —சர்க்கார்!

ஏற்கனவே கைத்தறித் துணி விற்பனை குறைந்துவிட்டதாம்! சரக்குகளும் கூட்டுறவு விற்பனை நிலையங்களில் தேங்கிவருகின்றனவாம்!

இதனையும் மந்திரி வெங்கட்ராமன்தான் கூறியிருக்கிறார்.

நீதியற்ற செயலாம்!

கல்கத்தா, டிச. 12—

"இந்தோனேஷிய அரசாங்கத்தின் போக்கு மனிதத்தன்மையற்றதாகவும், நீதிமுறை இல்லாததாகவும் உள்ளது" என்று, பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் செய்ட்ஸ்கில் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

நெய்வேலியில் உரத் தொழிற்சாலை

டெல்லி நிறுவும் என்ற நம்பிக்கையில்லையாம்

மந்திரி வெங்கட்ராமன் அழுகுரல்

சென்னை, டிச. 12—

நெய்வேலித் திட்டத்தில் ஒரு பிரிவாக உத்தேசிக்கப்பட்டிருந்த உர உற்பத்தித் தொழிற்சாலையை டெல்லி சர்க்கார் நிறுவும் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்றும், தனிப்பட்ட எவரும்கூட அதனை எடுத்து நடத்த இதுவரை முன்வரவில்லை என்றும் மாநிலத் தொழில் மந்திரி வெங்கட்ராமன் கூறியிருக்கிறார்.

1957-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்களில் சுங்க இலாகாவினரும், கலால் இலாகாவினரும், ரூ. 96,90,195 மதிப்புள்ள கள்ளத் தங்கத்தைக் கைப்பற்றியுள்ளனராம்.

மத்திய சர்க்கார் நிதி நிலைமை

நிதிக்குழுவின் சிபாரிசால் பாதிக்கப்படுமா?

புதுடில்லி, டிச. 13—

மாநிலங்கள் தரவேண்டிய கடன்களை ஒன்றுசேர்த்து இரு கடன்களாகப் பிரித்து, ஒரு கடன் தொகையை 1957 ஏப்ரலிலிருந்து 15 ஆண்டுகளுக்குள்ளும், மற்றொரு கடன் தொகையை 30 ஆண்டிற்குப் பிறகும் மத்திய அரசாங்கம் பெறவேண்டும் என்று நிதிக் குழு சிபாரிசு செய்துள்ளது.

இதைப் பற்றி மக்கள் சபையில் மத்திய நிதி அமைச்சர் பேசுகையில், இந்தச் சிபாரிசை அமுல் நடத்தினால் மத்திய அரசாங்கத்தின் நிதி நிலைமை பெரிதும் பாதிக்கப்படும் என்றும், மாநில சர்க்கார்களின் உடனடியான முதலீட்டுச் செலவுகளுக்கும், 2-வது, 3-வது திட்டங்களுக்குக் கூட பண உதவி செய்ய முடியாத நிலை மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிற்றுண்டி விடுதிகளுக்குக் கடன் தரும் திட்டம்

புதுடில்லி, டிச. 12—

சிற்றுண்டி, உணவு விடுதி அதிபர்களுக்கு இலகுவான தவணை முறைகளில் திருப்பிச் செலுத்தும் வகையில் கடன் தருவதுபற்றி பரிசிலனை செய்யுமாறு தேசியப் பாங்கியையும், ஆயுள் இன்சூரன்ஸ் நிறுவனத்தையும் மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளதாம்.

பாலைவனம் பரவாமல் தடுப்பதற்கு நிதி உதவியாம்!

புதுடில்லி, டிச 12—

பஞ்சாப் மாநிலத்தில் பாலைவனம் அதிகரித்துவருவதைத் தடுப்பதற்காக அம்மாநில அரசாங்கத்திற்கு மத்திய சர்க்கார் ரூ 5,67,000 அளித்துள்ளதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக் கழகங்களில் போதனமொழி

காலப்போக்கில் இந்தியாகத்தான் இருக்கவேண்டுமாம்

மக்கள் சபையில் கல்வி மந்திரி கூறுகிறார்

புதுடில்லி, டிச. 12—

"இப்போதைக்கு தென்னாட்டில் இந்திப் பல்கலைக் கழகம் நிறுவும் திட்டம் எதுவும் சர்க்காரிடம் இல்லை"

என்று, உதவி கல்வி மந்திரி ஸ்ரீமாலி, மக்கள்சபையில் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

"இந்திப் பல்கலைக் கழகம் நிறுவ வேண்டுமென ஏன் சர்க்கார் நினைக்கிறது"

என்று, கேட்கப்பட்டபோது, அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

"கல்வியைப் பொறுத்தவரையில், மொழி என்பது ஒரு முக்கியமான அம்சமாகும். காலப்போக்கில், பல்கலைக் கழக மட்டத்தில் நமது சொந்த மொழிதான் போதனமொழியாக இருக்க வேண்டும்"

உஸ்மானியா பல்கலைக் கழகம்

மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்ளாது

புதுடில்லி, டிச. 12—

ஐதராபாத்தில் உள்ள உஸ்மானியா பல்கலைக் கழகத்தை மத்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளுகிற உத்தேசத்தைக் கைவிட்டு விட்டது.

இந்தப் பல்கலைக் கழகத்தைப் பெற்று, அதனை ஒரு இந்திப் பல்கலைக் கழகமாக்க சர்க்கார் திட்டமிட்டிருந்தது.

இந்தத் திட்டத்தினை, முன்னைய ஐதராபாத் சர்க்காரும்; இப்போதைய ஆந்திரப் பிரதேச சர்க்காரும் கடுமையாக எதிர்த்ததின் பேரில் திட்டம் கைவிடப்பட்டது.

இந்த விவரங்களை, உதவி கல்வி மந்திரி டாக்டர் ஸ்ரீமாலி, மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சூரியனைச் சுற்றிவரும் புதிய கிரகம்!

நாங்கிங் ஆராய்ச்சிக்கூடக் கண்டுபிடிப்பு

ஹாங்காங், டிச. 11—

புதிய கிரகம் ஒன்றை நாங்கிங்கில் உள்ள ஒரு ஆராய்ச்சிக் கூடம் கண்டிருப்பதாக நவசீன செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தக் கிரகம், சூரியனைச் சுற்றி வருவதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தி வளமுள்ள மொழிதானா?

குறைபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன!

அலகாபாத், டிச. 12—

"வலுக்கட்டாயமாக, மற்ற மொழி பேசும் மக்கள்மீது இந்தியைத் திணிப்பதற்கு முயற்சிக்கக்கூடாது"

என்று, ஈரானில் முன்பு இந்தியத் தூதுவராக இருந்தவரும் கல்வி நிபுணருமான தாராசந்த் எச்சரித்துள்ளார்.

உத்தரப் பிரதேச மாநில இந்துஸ்தானி கழகத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமைவகித்துப் பேசிய அவர் மேலும், உலகில் வளர்ச்சியடைந்துள்ள மற்ற மொழிகளின் அளவுக்கு இந்தியை வளமுள்ளதாக்க வேண்டும்" என்று அவர் தெளிவாகக் கூறியிருப்பதிலிருந்து, இந்தி வளமுள்ள மொழியல்ல—இனி வளமுள்ளதாக்க வேண்டியது அவசியம்; உலகில் வளர்ச்சியடைந்துள்ள மொழிகளுடன் 'இந்தி' சமநிலையை அடையவில்லை என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டியிருக்கிறாரென்றேகொள்ள வேண்டும். 'இந்தி' ஆட்சி மொழியாகும் தகுதியை இன்னும் அடையவில்லை என்பதை உணர்ந்தே அவர், அவ்வாறு பேசியுள்ளார் என்றே கருத வேண்டியுள்ளது.

தொடர்ந்து பேசுகையில் அவர், 'இந்தியில் புதிய சொற்களைச் சேர்த்துக்கொள்வதற்குத் தயங்கக் கூடாது' என்று கூறியுள்ளார்.

இந்தியில் விஞ்ஞான, தொழில் துறை சொற்களைக் கண்டறிய வேண்டும் என்றும் அவர், இந்திக்கு உள்ள குறைபாட்டினைத் தெளிவாக்கியுள்ளார்.

★

அதே விழாவில் பேசிய உ. பி. கல்வியமைச்சர் கமலாபதி திரிபாதி கேட்டுக்கொண்டதாவது:—

"தேசிய மொழியாக இயங்கும் பொறுப்பிற்கும், உரிய அளவிற்கும் இந்தியை வளமிக்க—சக்தி நிறைந்த மொழியாக்க வேண்டும்."

3 ஆண்டுகளில் 3,000 கூட்டுறவுப் பண்ணைகள்

மத்திய சர்க்கார் முடிவு

புதுடில்லி, டிச. 12—

அடுத்த மூன்று ஆண்டுகளில் எல்லா மாநிலங்களிலும் 3,000 கூட்டுறவு விவசாயப் பண்ணைகளை மேற்கொள்ள இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதென்று மக்கள்சபையில் மத்திய அரசாங்க கூட்டுறவு அமைச்சர் டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் தெரிவித்துள்ளார்.

சில இடங்களில் கூட்டுப் பண்ணைகள் வெற்றியடைந்துள்ளன என்றும், சில இடங்களில் வெற்றிபெறவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 3 இலட்சம் நிலமற்ற விவசாயக் குடும்பங்களுக்கு நிலம் கிடைப்பதற்கும் வழிகோலப்படுமாம்.

பொது இடங்களிலுள்ள பிரிட்டிஷார் சிலைகள்

அகற்றப்பட்டுவிடுமென முதலமைச்சர் தகவல்

பம்பாய், டிச. 12—

பம்பாய் மாநிலத்தில் பொது இடங்களிலுள்ள பிரிட்டிஷ் சிலைகளையெல்லாம் அகற்றிவிடுவது என்று அம்மாநில அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக முதலமைச்சர் சாவன் தெரிவித்துள்ளார்.

திருத்தம்

சென்னை 12—12—57 'நம் நாடு' இதழ் மூன்றாம் பக்கத்தில் உள்ள 'சென்னை 19-வது வட்ட தி. மு. க. பொதுக்கூட்டம்' என்ற தலைப்பிலும், அதன் கீழுள்ள செய்தியிலும் 'சென்னை 19-வதுவட்ட அண்ணா நூல்நிலையச் சார்பில் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்' என்றிருக்க வேண்டும். திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம். தவறு நேர்ந்தமைக்குப் பொறுத்தருள்க.

(ஆ-ர்)

சுதந்தரப் போராட்ட வரலாறு வெளிவருமா?

புதுடில்லி, டிச. 13—

இந்தியாவின் சுதந்தரப் போராட்ட சரித்திரத்தை வெளியிட இன்னும் நான்கு ஆண்டுகளாகும் என்றும், பல மாநிலங்களிலிருந்து அவசியமான தகவல்களைச் சேகரிக்க வேண்டியுள்ளது என்றும் மக்கள் சபையில், கல்வி அமைச்சர் டாக்டர் மாலி தெரிவித்துள்ளார்.

கைமாறுகிறது — ஆனால் நஷ்டஈடு தரப்படுகிறது

கொழும்பு, டிச. 13-

தமிழ் நாட்டில் கட்டம்பாலையிலுள்ள தனது 'குவாரண்டைன்' முகாமை இலங்கை அரசாங்கம் டிசம்பர் 23-ம் தேதியன்று சென்னை அரசாங்கத்திற்கு ஒப்படைக்கும்; இதன் கட்டிடங்களுக்கு நஷ்டஈடாக இலங்கைக்கு ரூ. 2 இலட்சம் தரப்படும் என்று தெரியவருகிறது.

நிதி அமைச்சர் கனவு நிறைவேற்றப்படுமா?

சென்னை, டிச. 12—

"நாட்டில் தற்போது உள்ள சூழ்நிலையில் அனாதை விடுதிகள் மிகவும் அவசியம்.

"அனாதைக் குழந்தைகளே நாட்டில் இல்லை என்ற நிலையை ஏற்படுத்தவேண்டும்" என்று, காங்கிரஸ் ஆட்சியின் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை ஒய். எம். சி. ஏ. சிறுவர் விடுதி விழாவில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் புகையிலை இறக்குமதியேன்?

மாநிலங்கள் சபையில் கேள்வி

புதுடில்லி, டிச. 13—

30—6—57ல் முடிவாகும் மூன்றாண்டுக் காலத்தில், 60 இலட்சம் இராத்தல் எடையுள்ள அமெரிக்கப் புகையிலை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்றும், சிகரெட் சுருட்டுகளுக்கு [illegible] பயன்படுத்தப்பட்டன என்றும், மாநிலங்கள் சபையில் உதவி வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

'ஆந்திர மாநிலத்தில் புகையிலை கிடைக்கும்போது இறக்குமதி செய்வானேன்? என்று கேட்கப்பட்டபோது, அந்தப் புகையிலையின் 'தரம்' மிகக் குறைவானதென்றும், அவற்றின் 'தரம்' எப்பொழுது உயருமென்று தெரியவில்லையென்றும், எனவேதான் இறக்குமதி செய்யப்படுகிறதென்றும் அமைச்சர் கூறினார்.

பட்டம் பதவி எங்களுக்குப் பெரிதல்ல!

அரசியல் கண்ணியமே உயர்வானது

முரப்பநாடு தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் என். வி. நடராசன் எடுத்துக்காட்டு

நெல்லை அடுத்த முரப்பநாடு தி. மு. கழகச் சார்பில் 23—11—57ல், பெருமாள் கோவில் திடலில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர் வெ. தாமரைச்செல்வன் தலைமை வகித்தார். துவக்கத்தில் தோழர்கள் திருப்பாற்கடல், அரியமுத்து ஆகியோர் பேசினர்.

இறுதியாகத் தோழர் என். வி. நடராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்தில் பணியாற்றும் கட்டத்தை அடைந்துள்ளதற்குக் காரணம், பட்டம்-பதவிகள் பெற வேண்டும்—அதன் வாயிலாக வாழ்க்கை நடத்த வேண்டும் என்பதற்காக அல்ல; கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக தி. மு. கழகத்தின் தாய்க்கழகத்தை—மாபெரும் இயக்கத்தைத் துவக்கிவைத்த இலட்சிய வீரர்களின் உயரிய கொள்கையை நடைமுறையில் கொண்டுவருவதற்காகவே மக்கள் மன்றத்திலும், சட்டமன்றத்திலும் தி. மு. கழகம் தனது கொள்கை வெற்றி பெறுவதற்கான பணியில் ஈடுபாடு கொண்டிருக்கிறது. எனவே, சட்டமன்றப் பிரவேசந்தான் எங்களது இலட்சியம் என்றோ, அல்லது பட்டம்-பதவிகளைப் பெறுவதுதான் தி. மு. கழகத்தின் கண்ணோட்டம் என்றோ கூறுபவர்கள் எவராயினும், உண்மையை மறைத்துப் பேசும் பேர்வழிகள் அல்லது அரசியல் விவேகம் இல்லாதவர்கள் என்பதைத்தான் எடுத்துக்காட்டுமேயன்றி, வேறில்லை.

"திராவிட முன்னேற்றக் கழகம் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆற்றிவரும் பணியில் மாற்றுக் கட்சியினர் கொள்கையளவில் ஒருவருக்கொருவர் குற்றஞ்சாட்டி கழகத்தைத் தாக்கிப் பேசலாமேயன்றி, அரசியல் நெறியில்—கண்ணியத்தில், எவரும் குறை கூற முடியாது.

"பொதுத் தேர்தலை எடுத்துக் கொண்டாலும், ஆளும் வர்க்கத்துக்கு மாறுபட்ட நோக்கமுடைய எதிர்க்கட்சிகள், தி. மு. கழகத்திற்குத் துணையாய் நிற்கவேண்டியதற்கு மாறாக, நேர் விரோதமாக—மித்திரபேதமான காரியங்களில் ஈடுபட்டன; ஆனால் தி. மு. கழகம் மட்டும், தான் கொடுத்த வாக்குறுதியிலிருந்து தவறாமல், துரோகத்திலும், மறைமுக சூழ்ச்சியிலும் ஈடுபட்டகட்சிகளிடத்தில் நேர்மையைக் காட்டியிருக்கிறது. எனவே, தி. மு. கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றுபவர்களுக்கு பட்டம்-பதவிகள்தான் என்றால், அதற்கேற்ப கொள்கையையும், கட்சியின் கௌரவத்தையும் கைநழுவ விட்டிருக்கும். எனவே, கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் கழகம் ஆற்றிவரும் பணியில்—கடைப்பிடித்துவரும் கண்ணியத்தில் மாற்றாரும் குறை சொல்ல முடியாது என்பதை நாங்கள் தலைநிமிர்ந்து கூறுவோம்.

"கழகத்தின் முக்கிய கொள்கைகள், திராவிடம் எதன் பேராலும் எவருக்கும் அடிமைப்பட்டு இயங்குதல் கூடாதென்பதும், அதுபோன்றே ஜாதி-மத சமயங்களின் பேரால் பிறவியிலும் வாழ்விலும் உயர்வு தாழ்வு என்பது ஒழிந்து, மொழி-இனம் ஆகியவைகளின் அடிப்படையில் ஒன்றுபட்டு வாழ்தல் வேண்டுமென்பதே யாகும்.

இந்த உயரிய கொள்கையைப் புரிந்துகொள்ளாதவர்களும், ஜாதிவெறியைத் தூண்டிவிட்டு அதன் நிழலில் அரசியல் ஆதிக்கம் செலுத்துபவர்களும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாக்கிப் பேசிவருகின்றனர்; ஆளும் வர்க்கத்திற்கும் பல்லக்கு சுமக்கின்றனர். இந்த இழிதன்மையிலிருந்து தென்னாட்டு மக்கள் விடுபட்டுத் தன்மான வாழ்வினைப் பெறுதல் வேண்டுமென்பதே கழகத்தின் கொள்கையாகும்.

'இக்கொள்கை விரைவில் வெற்றியுறுவதற்கு விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட ஏனைய தொழிலாளத் தோழர்களும், நடுத்தர மக்களும், மாணவர்களும், கழக முயற்சிகளுக்குப் பெருந்துணையாய் நின்று, வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் அநீதிகளைத் தகர்த்தெறிய வாரீர் எனப் பணிவன்புடன் அழைக்கின்றோம்."

மேலும் தோழர் என். வி. நடராசன் அவர்கள், முதுகுளத்தூர் சம்பவங்களைப்பற்றியும், சட்டமன்றத்தில் அதுகுறித்து தி. மு. கழகம் எடுத்த முடிவினையும் விளக்கிப் பேசினார்.

பின்னர் செயலாளர் புதிய முத்து நன்றிகூற கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவுற்றது.

நாகர்கள் தலைவர் பிஜோ

பண்டிதரின் கண்டுபிடிப்பு

புதுடில்லி, டிச. 13—

ஆசாம் மாநில நாகர்கள் பற்றி மாநிலங்கள் சபையில் கேள்விகள் கேட்கப்பட்டன.

இதுவரை 87 நாகர்கள் மட்டுமே சரணடைந்துள்ளனர் என்று திருமதி இலட்சுமிமேனன் தெரிவித்தார்.

'நாகர் தலைவர் பிஜோவுக்கும்—சுபாஷ் சந்திரபோசுக்கும் தொடர்புஇருப்பது உண்மையா?' என்று கேட்கப்பட்டபோது; 'பிஜோ இன்னும் இந்த உலகத்தில்தான் இருக்கிறார் என்று நினைக்கிறேன்' என்று பண்டித நேரு பதிலளித்துள்ளார்.

தொழில்நுட்பத் திட்டங்கள்

புதுடில்லி, டிச. 13—

தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் 75 திட்டங்கள்பற்றி அமெரிக்க அரசாங்கத்திற்கு இந்தியா அனுப்பியுள்ளதாம்.

முகவரி மாற்றம்

கழகத் தோழர்களும், நிர்வாகிகளும் என்னுடன் தொடர்புகொள்ள கீழ்க்கண்ட (பழைய) முகவரிக்கே தொடர்புகொள்ள வேண்டுகிறேன்:—

கோ. செங்குட்டுவன்,
40, பத்திரையன் தெரு,
சென்னை-1.

சென்னை 8-வது வட்ட தோழர்களுக்கு :

“நமது வட்ட தி. மு. கழக வளர்ச்சி குறித்தும், சார்பு மன்றங்களின் ஒத்துழைப்பு குறித்தும் கலந்து நிர்மானிக்க 15—12—57 காலை 9 மணியளவில் தி.மு. கழக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள். சார்பு மன்ற உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய ஒரு கூட்டம் 16/99, அம்மன் கோவில் தெரு, ‘திராவிடன்’ அலுவலகத்தில் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெறும்; துணைப் பொதுச்செயலாளர் என். வி நடராசன் அவர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்” என, மேற்படி வட்டச் செயலாளர் அறிவிக்கிறார்.

சென்னை--14-வது வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்களுக்கு :

15—12—57 காலை 9 மணியளவில் 43, பந்தர் தெருவில், தி.மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

நாகூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு :

15—12—57காலை 11 மணிக்கு சிவன் கீழ வீதி, கூட்டுபார்தியார இல்லத்தில், தோழர் க. மாரியப்பன் தலைமையில் தஞ்சைமாவட்ட தி. மு. க. செயலாளர் என்.எஸ். இளங்கோ முன்னிலையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

பெங்களூர்-சலவாதிமா நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு:

15—12—57 மாலை 3 மணிக்கு கழக மனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, கழகக் கட்டிடத்திற்காக சொந்தமாக இடம் வாங்குவது; மறுமலர்ச்சி நூல் நிலையம் அமைப்புக் குழு தேர்வு; பொதுக்கூட்டம் நடத்துவது; கழக வரவு-செலவு ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மு. கருணாநிதிக்கு வரவேற்பு

மதுராந்தகத்திற்கு 15-12-57-ல், வருகை தரவிருக்கும் தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., அவர்கட்கு, தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்—மதுராந்தகம் கிளையின் சார்பில் ஓர் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும் என மேற்படி சங்கச் செயலாளர் கே. வி. நடராசன் அறிவிக்கிறார்.

டி. என். இராஜரத்தினம் முதலாவது ஆண்டு நினைவு நாள்

15—12—57 காலை 8 மணிக்கு சேலம்—செவ்வாய்ப்பேட்டை, பெரிய எழுத்துக்காரத் தெருவிலுள்ள ரெட்டியார்கள் பஜனை மடத்தில் திருவாடுதுறை டி. என். இராஜரத்தினம் பிள்ளை அவர்கள் முதலாவது ஆண்டு நினைவு நாள் விழா திரு. எஸ்.கோவிந்தராசுலு ரெட்டியார் தலைமையில் நடைபெறும்; திரு. பி. சி. கோதாரி அவர்கள் டி. என். ஆர். படத்தைத் திறந்துவைப்பார்; திருவாளர்கள் பி. மதுரைப்பிள்ளை, பி. இரத்தினசாமிபிள்ளை ஆகியோரும் மற்றும் பலரும் பேசுவர்.

தேனி, நெடுஞ்செழியன் மன்ற பொது உறுப்பினர்களுக்கு :

16-12-57 இரவு 10 மணிக்கு தேனி நகர தி. மு. க. உட்கிளையான நெடுஞ்செழியன் மன்றத்தின் பொது உறுப்பினர் கூட்டம் கழக மனையில் தோழர் மு. தங்கராசன் தலைமையில் நடைபெறும்.

புதுக்கோட்டை மக்கள் பணி மன்றம்

15—12—57 இரவு 8 மணிக்கு புதுகோட்டை கணேசநகர் திரு. சுப்பையா அவர்கள் இல்லத்தில் மக்கள் பணி மன்றச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

இராணுவம் தயாராகிறது

டச்சு நிறுவனங்கள் கைப்பற்றப்படுகின்றன

இந்தோனேஷியாவில் நிலைமை

ஜகார்தா, டிச. 13—

இந்தோனேஷியாவில், டச்சுக்காரருக்கு எதிரான உணர்ச்சி வெள்ளம் இன்னும் தணியவில்லை; நாளும் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

ஹாலந்து சர்க்கார் ஏதேனும், தங்களுக்குப் பிடிக்காத நடவடிக்கைகளை மேற்கொண்டால் அவற்றைச் சமாளிப்பதற்கென இந்தோனேஷிய இராணுவத்தினர்—விடுமுறையில் வீடு சென்றிருந்தவர்களெல்லாம் திருப்ப அழைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

பாண்டுங்கில் உள்ள எல்லா டச்சு நிறுவனங்களும், வர்த்தக நிலையங்களும் இராணுவத்தின் நிர்வாகத்தில் வந்திருப்பதாயும், இதற்குக் காரணம், விரும்பத்தகாத சம்பவங்களைத் தடுப்பதே என்றும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

மேற்கு இரியன் என்ற மேற்கு கியூகினியைப் பெறுவதற்கு இராணுவத் தயாரிப்புடன் இருக்க வேண்டுமென்ற கருத்தும் பலமாக உலவுகிறதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானில் மந்திரி சபை அமைப்பு

பெரோஸ்கான் நூன் பிரதமராவார்

கராச்சி, டிச. 13—

இராஜினாமாச் செய்த பாகிஸ்தான் பிரதமர் சுந்திரீகர், புதிய சர்க்கார் அமைக்கத் தான் மேற்கொண்ட முயற்சி தோற்றுவிட்டதாகக் குடியரசுத் தலைவர் இஸ்கந்தர் மிர்ஜாவிற்குத் தெரிவித்துவிட்டதாகத் தெரியவருகிறது.

உடனே மிர்சா, குடியரசுக் கட்சித் தலைவர் மாலிக் பெரோஸ் கான் நூன் என்பாரை அழைத்து புதிய சர்க்கார் அமைக்குமாறு கேட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

குடியரசுக் கட்சி, அவாமி லீக், தேசியக் கட்சி, காங்கிரஸ் கட்சி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள், தங்களுக்கு 80 பேர் கொண்ட சபையில் 50 உறுப்பினர்களின் பலம் இருப்பதாகவும், அதனால் ஒரு உறுதியான சர்க்கார் அமைக்க முடியும் என்றும் மிர்ஜாவுக்கு மகசர் அனுப்பி உள்ளனராம்.

நூன், மந்திரி சபை அமைத்தால், அதில் முன்னையப் பிரதமர் சுராவர்தி இடம் பெறமாட்டார் என்றும், அவரும் டாக்டர் கான்சாகிபைப் போல வெளியிலிருந்துகொண்டே சர்க்காருக்கு உதவியாயிருப்பார் என்றும், கிழக்கு பாகிஸ்தானில் முதன் மந்திரியாயிருக்கும் அதூர் ரஹ்மான் கான் உதவிப் பிரதமராக ஏற்கப்பட்டால், லீக் கூட்டு சர்க்காரில் சேரும் என்றும் கூறப்படுகிறது.

கழகக் கூட்டங்கள்

★

கல்லல் :
காந்தி திடலில்
16—12—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் : சி. பி. சிற்றரசு

★

ஆண்டார்சன்பேட்டை
16—12—57 மாலை 5 மணிகக்கு
தலைவர் : சாம்பசிவம்
பேசுவோர் :
என். சீவரத்தினம்
எம். மாணிக்கம்
தி. க. தாமரைவிழியன்
நா. கோபால்

★

மதுராந்தகம்
போலீஸ் திடல்
15—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : எம். ஆர். துரைசாமி
பேசுபவர் :
மு. கருணாநிதி எம்.எல்.ஏ.

★

வேப்பத்தூர்
(குடந்தை வட்டம்)
கடைத்தெரு
16—12—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : வி. ரகுநாதன்
பேசுவோர் :
போன். சோக்கலிங்கம்
போ. தருமன்
கு. இராசமாணிக்கம்
என். அசோகன்
எஸ். ஏ. துரை
பி. ஏ. லிங்கன்

★

குறிச்சி
(தஞ்சை மாவட்டம்)
கடைத்தெருவில்
17—12—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகக் கிளைத் துவக்க விழா
தலைவர் : கே. கே. குஞ்சிதபாதம்
பேசுவோர் :
போன. சோக்கலிங்கம்
போ. தருமன் என். அசோகன்
எஸ். எம். மாரிமுத்து
கு.ராஜமாணிக்கம் பி.ஏ.லிங்கன்
எம். ஜமால் முகம்மது

★

மேல்பாடி :
15—12—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : இராமநாதன்
பேசுவோர் :
வே. அ. இளஞ்செழியன்
ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி

★

வலசைவெட்டுக்காடு :
தி. மு. க. துவக்க விழா
15—12—57 காலை 10-மணிக்கு
தலைவர் : எம். பி. ஏழுமலை
பேசுவோர் :
தி. ந. சம்பந்தம்
டி. கே. சிவகுமாரன்
வி. பார்த்தசாரதி

★

ஏகனும்பேட்டை :
தி. மு. க. துவக்க விழா
15—12—57 மாலை 6-மணிக்கு
பேசுவோர் :
தி. ந. சம்பந்தம்
டி. கே. சிவகுமாரன்

சென்னை—44வது வட்ட அப்துல் மஜீத் படிப்பகம்

15—12—57 இரவு 7 மணியளவில் அப்துல் மஜீத் படிப்பக சார்பாக 44-வது வட்டத்தில் தோழர் கே. ஏ. சீனிவாசன் தலைமையில் மஜீத் இலவச இரவுப் பள்ளி துவக்க விழா நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

கே. சி. சுப்பிரமணியம் (செட்டியார்) மறைவு

சென்னை, டிச. 14—

நெடுங்காலமாக நீதிக் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்து நற்பணியாற்றிய திரு. கே. சி. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள், நேற்று தஞ்சை மாவட்டத்தில் பொறையாரிலுள்ள தனது இல்லத்தில் இயற்கையெய்தினர் என்பதை வருத்தத்துடன் அறிவித்துக் கொள்கிறோம். அவர் நல்ல வழக்கறிஞர்; நாட்டிற்கு நற்பணிகள் பல செய்தவர்.

பாட நூல் ஆசிரியர்கள் மாநாடு

சென்னை - செயிண்டு மேரி மண்டபத்தில்
16—12—57 திங்கள் மாலை 5-30 மணிக்கு

தலைவர் : **சர். பி. டி. இராசன்** MLC

சிறப்பாளர் : **டி. பி. சீநிவாசவரதன்** MLC.
(தென்னிந்திய ஆசிரியர் சங்கத் தலைவர்)

அறிஞர் பெருமக்கள் பலரும் கலந்து கொண்டு பேச இருக்கின்றார்கள்.

அனைவரும் வருக. —அமைப்பாளர்கள்

பாட நூல் ஆசிரியர்கள் மாநாடு

16—12—57 மாலை 6-30 மணிக்கு, சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில் திரு. பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் மேற்படி மாநாட்டை திரு. டி. பி. சீனிவாசவரதன் திறந்துவைப்பார் திரு. ம. இராசமாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். திருவாளர்கள் மயிலை-சிவ. முத்து. கா. அப்பாதுரை, த. சே. உமாபதி, எஸ். எஸ். அருணகிரிநாதர், அன்புகணபதி, ந. சண்முகம், பகிரதன், கொத்தமங்கலம்-சுப்பு, அம்பை-சங்கரன், ஆறுமுகம் (செட்டியார்) ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னைக் கல்விச் சங்கம்

15—12—57 மாலை 4 மணிக்கு சென்னை--12, ஸ்டாரான்ஸ் ரோடு ஆண்பள்ளியில், திரு. த. வே. முருகேசனர், ‘இம்மை இன்பம்’ எனும் பொருள் குறித்துப் பேசுவார்.

சென்னை மாநில மீன் பிடிப்போர் கூட்டுறவாளர் பிரதிநிதிகள் மாநாடு

15—12—57காலை 10 மணிக்கு செங்கற்பட்டு தாலுகா சரிகாட்டு குப்பத்தில், தோழர் என். சீவரத்தினம் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும்; திறப்பாளர்: திரு. கே. குப்புசாமி; கொடியேற்றுபவர்: திரு. சி. சூரியமூர்த்தி. அன்று மாலை 6 மணிக்கு திரு. ஏ. கோவிந்தசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; பலர் பேசுவர்.

சென்னை-தூளை ஊ.பு.அ.சௌந்திர பாண்டியனர் நினைவுப் படிப்பகம்

15—12—57 காலை 9 மணியளவில் மேற்படி படிப்பக நிதிக் குழுவினர், பொங்கல் விழாவிற்காக தோழர் இரா. பாலராசு தலைமையில், வட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அரிசி அல்லது காசு முதலியவற்றை வசூல் செய்வார்கள்.

என். எஸ். கே. நினைவு மன்றத் திறப்பு விழா

15—12—57 மாலை 6 மணிக்கு சென்னை 10-வது வட்ட தி. மு கழகக் கிளை சார்பில், ஆசீர்வாதபுரம் (பிரபாத் டாக்கீஸ் அருகில்) தோழர் டி. கே. மாதவன் தலைமையில் மேற்படி மன்றத் திறப்பு விழா நடைபெறும். தோழியர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ. தோழர்கள டி. வி. நாராயணசாமி, எஸ். எஸ். தென்னரசு, என் எஸ். நாராயணன், வீ சீ. தமிழ்தாசன், அ. இராசகோபால், உ. பில்லப்பன் ஆகியோர் பேசுவர்.

என். எஸ். கே. படத் திறப்பு விழா

15—12—57 காலை 9 மணியளவில், சென்னை-திருவல்லிக்கேணி எண் 4, நமசிவாய முதலி தெருவில், (இராகவன் நூல் நிலையப் பணிமனை) தோழர் எம். ஆர். இரத்தனகுமார் தலைமையில் மேற்படி விழா நடைபெறும்; எஸ். எஸ். கே. படத்தை தோழர் இமயவரம்பன் திறந்துவைப்பார்; தோழர்கள் கிள்ளிவளவன், நீலநாராயணன், எல். கோபால், கி. கண்ணன், மு. வரதராசன், ஏ. கே. இளஞ்செழியன், அன்பரசு, க. சண்முகம் ஆகியோர் பேசுவர்.

சென்னை—வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

15—12—57காலை 10 மணிக்கு தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், திருக்குறளில் ‘அவா அறுதல்’ என்ற அதிகாரத்தை வித்துவான் என். கிருஷ்ணமூர்த்தி விரிவுரையாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

15—12—57 காலை 8 மணிக்கு சென்னை 35-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் தோழர் சோ. கிருட்டிணமூர்த்தி தலைமையில், ‘வள்ளுவரும்-வாழ்க்கையும்’ என்ற தலைப்பில் தோழர்கள் கோ. இறைமுடிமணி, அருட்சிவவர்மன், மு. சு. இராமச்சந்திரன் பேசுவர்.

* * *

15—12—57 இரவு 7 மணிக்கு சென்னை - தியாகராயநகர் மதிவளர் மன்றத்தில், தோழர் பி. லோகநாதன் தலைமையில், ‘நம நாடு’ என்ற தலைப்பின்கீழ் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 காலை 10 மணியளவில், சென்னை—ஆலந்தூர் தி. மு. கழக மாடியில், ‘மதம் தேவையா ?’ எனும் தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 மாலை 6 மணிக்கு அரக்கோணம்—குமரன் நகர் பொதுநல மன்றப் பணிமனையில், திரு. கோ. கருணாகரன் தலைமையில். ‘கடமை’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 காலை 10 மணியளவில், சென்னை — பெத்து நாய்க்கன்பேட்டை மக்கள் மன்றத்தில் (எண். 17, திருப்பள்ளித் தெரு), தோழர் ப. ஆசைமுத்து தலைமையில், ‘சமுதாயம்’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 மாலை 6 மணிக்கு புதுக்கோட்டை கலைவாணர் மன்றச சார்பில், தோழர் வி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில், ‘மொழிப் பிரச்சினைகள்’ எனும் தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 இரவு 7-30 மணிக்கு, உதகை அண்ணா மூரசொலி மன்றத்தில், ‘நாட்டுப் பிரிவினை நலம் பயக்குமா ?’ என்ற தலைப்பில், தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

15—12—57 இரவு 7 மணிக்கு சென்னை-மவுண்ட்ரோடு,மல்லிகாபுரம் அறிவொளி மன்றப் பணிமனையில், மாணவ—மாணவிகள் தமிழ்மன்றச் சார்பில், தோழியர் ஆகினேஸ் தலைமையில், ‘கற்றவரும் கல்லாதவரும்’ எனும் தலைப்பில், தோழர்கள பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.